**தலைப்பு 311 - தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 28 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 22 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கபடுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தை தவிர, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல ் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிக்காட்டி இல 06 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருப்பினும், அத் தேவைப்பாட்டிலிருந்து விலகிய சந்தர்ப்பமாக காணப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திணைக்களத்தின் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது வைப்பு பெறுவனவுகள் ரூபா 3,663,806 மற்றும் வைப்பு செலுத்தல்கள் ரூபா 1,291,958 நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் சீராக்கப்பட வேண்டியிருப்பினும் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் சீராக்கப்பட்டிருந்தது. | இந்த திணைக்களம் நிதிச் செயற்பாடு மேற்கொள்ளாத நிறுவனமாவதால் அரச கணக்குகள் திணைக்களத்தினால் பெறப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் இந்த பணம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் சீராக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிக்காட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) மீண்டெழும் செலவினம்**<br><br>நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின முகாமைத்துவம் முடியுமான வரையில் சரியாக தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். அவ்வாறாயினும், 04 செலவு விடயங்களின் மதிப்பீட்டு நிதியேற்பாடு ஆன ரூபா 41,635,000 இல் கூட்டுத்தொகை ரூபா 4,224,600, அதாவது 10.15 சதவீதம் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்கள்/ஊழியர்கள் ஓய்வு பெறல், எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறாமை, COVID – 19 தொற்றினால் கடமை பயணங்கள் குறைந்தமையினால் வாகனங்கள் பராமரிப்பு செலவினம் மற்றும் சுற்றுலா விடுதி மற்றும் ஓய்வு விடுதிகள் மூடப்பட்டமையினால் மின்சாரம் மற்றும் நீர் என்பற்றிற்கான செலவினம் குறைவடைந்தமை காரணத்தினால் தொடர்புடைய செலவு விடயங்களில் நிதியேற்பாடு எஞ்சி காணப்பட்டது. இந் மீதி நிதியேற்பாடு கிடைக்காமையெனினும் அத்தியாவசியமாக ஏற்கப்பட வேண்டிய செலவுகளுக்காக குறித்த செலவு விடயங்களுக்கு மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br><br>நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்றின் அடிப்படையில் தேசிய பௌதீக திட்டமிடல் தயாரித்தலுக்கு தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாமையினால் 2506 இன் கீழ் நிதியேற்பாடு எஞ்சி காணப்பட்டதுடன், அந் நிதியேற்பாடு பிரதான அலுவலகத்தின் அவைகளத்தின் அத்தியாவசிய நவீனமயமாக்கல் நடவடிக்கைக்காக மாற்றப்பட்டது. | மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| **(ஆ) மூலதன செலவினம்**<br>தேவையின் பிரகாரம் வருடாந்த மதீப்பீட்டின் ஊடாக போதுமான நிதியேற்பாடு ஒதுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பினும் கட்டிட மற்றும் நிர்மாணிப்பு செலவு விடயங்த்திற்காக ரூபா 650,000 ஆக காணப்பட்ட வருடாந்த பாதிட்டு நிதியேற்பாட்டினை விஞ்சி ரூபா 2,515,200, அதாவது 287 சதவீத நிதியேற்பாடு | சனாதிபதியின் செழிப்பான தொலைநோக்கு கருத்திற்கு மற்றும் புதிய அரசின் கொள்கைகளுக்கு அமைவாக தேசிய பௌதீக திட்டம் நாளதுவரையாக்கப்படுவதற்கு ஏற்பட்டதுடன், அதின் நடவடிக்கைகளுக்காக வெவ்வேறு தரப்பினர்களுடன் கலந்தரையாடல்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் ஆகிய நடத்தப்பட வேண்டியிருப்பதனால் அதற்கான போதுமான மற்றும் பொருத்தமான வகையில் அவைக்களம் நவீனமயப்படுத்தல் அத்தியாவசியமான விடயமாகவதனால், அந் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக | மதீப்பீட்டின் ஊடாக போதுமான நிதியேற்பாடு ஒதுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

நி.பி 66 மாற்றல் ஊடாக இவ்வாறு நிதியேற்பாடு மாற்றப்பட்டது. ஒதுக்கப்பட்டிருந்தது.

## 2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு ஏனைய அமைச்சுக்களிடமிருந்து மூலதன செயற்திட்டங்களுக்காக பெறப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 2,135,588 எஞ்சியிருந்தது. அதில் கதிர்காம பூஜைபூமி அபிவிருத்திக்காக நிதி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா 2,431,056 இல் ரூபா 2,050,294 எஞ்சியிருந்ததுடன் அம் மீதி 85 சதவீதம் என அவதானிக்கப்பட்டது. | கதிர்காம வசதி கட்டிடங்களுக்கான நிலத்தோற்ற நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு கதிர்காம கோவிலிருந்து முன்மொழியப்பட்டிருப்பினும், அதற்காக மேலதிக நிதியேற்பாடு கோரப்படினும் நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்று நிலைமை மற்றும் செயற்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு போதுமான காலம் காணப்படாமையினால் அந் நிலத்தோற்ற நடவடிக்கைகள் கைவிடப்பட்டது. | கையேற்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்படைய காலத்தினுள் நிறைவு செய்யப்படல் வேண்டும். |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதி கட்டுப்பாட்டிற்காக பயனுறுதிமிக்க உள்ளக கட்டுப்பாடு அமைப்பொன்று தயாரிக்கப்பட்டு பேணிச்செல்லப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட வேண்டியிருப்பினும், அவ் அமைப்பின் பயனுறுதி தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் அமைப்பு வினைத்திறனாக பேணிச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மெற்கொள்ளப்பட வேண்டியிருப்பினும், அம் மீளாய்வு எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும், அவ்வாறான மீளாய்வொன்று | காணப்படுகின்ற உள்ளக கட்டுப்பாடு அமைப்பின் பயனுறுதி தன்மை தொடர்பாக எப்போதும் பணிப்பாளர் சபை கூட்டம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களின் போது கலந்துரையாடப்பட்டு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றமையும் எதிர்காலத்தில் இவை தொடர்பாக எழுத்து மூலமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

மேற்கொள்ளப்பட்டமைக்கு எழுத்து தெரிவிக்கின்றேன்.
அறிக்கை கணக்காய்விற்கு
முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| முன்வைக்கப்பட்ட இணக்க கூற்றின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இற்கு 04 உத்தியோகத்தர்களிடமிருந்தான அறவீடு நிலுவையாக காணப்பட்ட முற்பண மீதிகளின் மொத்த கூட்டுத்தொகை ரூபா 386,015 ஆக காணப்பட்டதுடன 1 ஆண்டு அதிகமான ரூபா 356,015 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு அதிகமாக ரூபா 30,000 உம் காணப்பட்டது. | வேலை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 183,840.00 ஆன தொகை குறித்த ஒழுக்காற்று நடவடிக்கை நிறைவு செய்யப்படாமையினால் அறவிடப்படுவதற்கு இயலாதுள்ளது. கடமை விட்டுச்சென்றுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து இருபது ஆண்டுகளுக்கு அதிகமான ரூபா 30,000 ஆன தொகை பதிவழிக்கப்படுவதற்காக அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 172,175.00 ஆன தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை கடன் மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

### 3.2 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 30/2016 இலக்க 2016 திசெம்பர் 29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பிரகாரம் அனைத்து எரிபொருள் | 2019 ஆம் ஆண்டிற்கு இணையாக எரிப்பொருள் பயன்பாடு பரிசோதனை குறைந்துள்ளது. எதிர்காலத்தில் 30/2016 இலக்க 2016 திசெம்பர் 29 திகதிய பொது நிர்வாக | சொத்துக்கள் முறையான வித்தில் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனைக்கும் பின்னர் 12 மாத காலவரையறையின் பின்னர் அல்லது எஞ்சின் தொடர்பாக பிரதான மேம்படுத்தலுக்கு பின்னர் ஆகிய விடயங்களினுள் முதலாவதாக வரும் சந்தர்ப்பத்திற்கு பின்னர் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய போதிலும் திணைக்களத்திற்கு சொந்தமான 14 வாகனங்கள் தொடர்பாக 2019 மே 01 ஆம் திகதியின் பின்னர் எரிப்பொருள் பயன்பாட்டு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டு எரிப்பொருள் பயன்பாடு பரிசோதிக்கும் குழு அறிக்கை தொடர்பாகவும் கணக்காய்வினால் திருப்தி அடைய முடியாதுள்ளது. | சுற்றறிக்கையின் 3.1 ஏற்பாடுகளுக்கு கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சிற்கு தற்காலிகமாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த கெப் வாகனமொன்று 2020 ஒக்தோபர் மாதம் வரையிலும் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு திணைக்களத்திற்கு சொந்தமான கப் வாகனமொன்று 04 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் வேறு இடத்தில் காணப்படுகையில் ரூபா 79,697 ஆன தொகை | தற்காலிகமாக அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருப்பினும் CAP – 8036 ஆம் இலக்க மோட்டார் வாகனம் திணைக்களத்தின் தொகுதிக்குரிய வாகனமாகுவதனால் காப்புறுதி நடவடிக்கைகள் இந்த திணைக்களத்தின் ஊடாக மேற் கொள்ளப்பட்டுள்ளது. வாகனம் இந்த திணைக்களத்திற்கு மீண்டும் கையளிக்கமாறு 2018 செப்தெம்பர் 26 திகதி எழுத்து மூலமாக கோரிக்கை விடுவிக்கப்பட்டிருப்பினும் மீண்டும் கையளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது, 2020 ஒக்தோம்பர் 26 ஆம் திகதி | சொத்துக்கள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்டு மீளாய்வாண்டிற்காக காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. மேலும் 2020 ஒக்தோபர் மாதம் கெப் வாகனம் மீண்டும் திணைக்களத்திற்கு கையளிக்கப்படும் போது மேம்படுத்தல் நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டது. | ஆகும். எனினும் அது கையளிக்கும் சந்தர்ப்பத்தில் மேம்படுத்தல் நிலையிலேயே வாகனம் கையளிக்கப்பட்டுள்ளது. | |

## 04. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 இற்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழிய எண்ணிக்கை 283 ஆக காணப்பட்டதுடன் உள்ளவாரான ஊழிய எண்ணிக்கை 163 ஆகவும் வெற்றிடங்கள் 120 ஆகவும் காணப்பட்டது. அதாவது நிறைவேற்று பதவியில் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை 51 ஆக காணப்பட்டதுன் அதில் 39 வெற்றிடங்கள் காணப்பட்டன. இது 77 சதவீதமாக காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக மூன்றாம் நிலை பதவி எண்ணிக்கையில் 38 சதவீதமும் இரண்டாம் நிலை மற்றும் முதலாம் நிலை தரங்களில் பதவிகள் முறையாக 48 சதவீதம் மற்றும் 22 சதவீதமாக வெற்றிடங்கள் காணப்பட்டது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மொத்த | ஆட் சேர்ப்பு நடைமுறை திருத்தப்படுவதற்கு நேர்ந்தமை, கொவிட் தொற்று நிலையினுள் திறந்த போட்டி பரீட்சை நடத்தப்படுவதற்கு முடியாமை, முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 01/2020 பிரகாரம் முதன்மை சேவையின் ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டிருத்தல், தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் திணைக்களத்தினுள் காணப்படாமை, போன்ற காரணங்களின் அடிப்படையில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஏனைய வெற்றிட பதவிகள் நிரப்பப்படுவதற்காக பொது நிர்வாக அமைச்சிற்கு மற்றும் மாகாண சபைகள் மற்றும் பொது சேவைகள் அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்கள் முறையாக நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஊழிய எண்ணிக்கையில் வெற்றிடம் காணப்படுகின்ற மொத்த பதவி எண்ணிக்கை 42 சதவீதமாக காணப்பட்டது. இக் காரணத்தினால் திணைக்களத்தின் நடவடிக்கைகள் வினைத்திறனாக மற்றும் விளைத்திறனாக மேற்கொள்ளலுவதில் அபாயம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | பணிப்பாளர் (கட்டுப்பாடு) மற்றும் பிரதி பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் இருவர் அனைத்து கொடுப்பனவுகளுடனும் முறையாக மாதாந்தம் ரூபா 189,350 மற்றும் ரூபா 71,745 வீதம் கொடுப்பனவின் கீழ் இணைக்கப்பட்டிருந்தனர். | நிறைவேற்று பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுவதினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் தடையில்லாது பேணிச் செல்லப்படுவதற்காக இந்த உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறே, வெற்றிடமான பணிப்பாளர் (பொறியியலாளர்) பதவிக்காக நியமிப்பதற்கு பொருத்தமான உத்தியோகத்தரொருவர் திணைக்களத்தினுள் இல்லாமையின் காரணத்தினால் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் மீண்டும் சேவையில் ஈடுப்படுத்தப்பட்டார். குறித்த பதவிகளுக்குரிய கொடுப்பனவு பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2018 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வெற்றிடம் முறையான நிரப்பப்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் திணைக்களத்தின் 10 உத்தியோகத்தர்கள், முறையான அங்கீகாரமின்றி கொடுப்பனவிற்கு வேறு அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். | செயற்திட்டங்களுக்காக உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்படும் போது திணைக்களத்திற்குரிய பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் விடுவிக்கப்பட்டிருப்பினும், 02 ஆண்டுகள் கடந்து செல்லுகையில் அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் /பின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. | திணைக்கள நடவடிக்கைகள் வினைத்திறனாக மற்றும் விளைத்திறனாக மேற்கொள்வதற்கு மனிதவளம் போதுமானதாக இல்லாமையின் பிரச்சனை ஏற்படாத வண்ணம் முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |

மேலும் ஒருங்கிணைந்த சேவையில் பதவி வகிக்கும் அதாவது அபிவிருத்தி சேவையின் உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்படும் போது ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அரசின் தேவையின் பிரகாரம் விடுவிக்கப்படும் போது அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் 11 ஆம் பின் இணைப்பு ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.